17.09.2025
Ind.OP. No. 126/2022
**ம.சா.1 – ராஜேஸ்வரி**

<u>2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

என் கணவர் பெயர் மோகன்ராஜ், அவரின் தம்பி பெயர் உதயமூர்த்தி. எனது மாமனார் பெயர் பிச்சைமுத்து. பிச்சைமுத்து கிராம நிர்வாக அலுவலராக இருந்தார் என்றால் சரிதான். தாவா சொத்தை எனது கணவரும், அவரின் தம்பி உதயமூர்த்தியும் சேர்ந்து 1 முதல் 6 எதிர்மனுதாரர்களுக்கு கிரையம் எழுதிக் கொடுத்தார்கள் என்றால் ஏமாற்றி வாங்கிக் கொண்டார்கள். தாவா சொத்து எனது கணவருக்கும், அவரது தம்பிக்கும் அவர்களது தகப்பனார் எழுதிக் கொடுத்த செட்டில்மென்ட் பத்திரம்படி பாத்தியம். இந்த சொத்து எனது மாமனாருக்கு பட்டா மூலம் பாத்தியம். பட்டா எண் தெரியாது. தாவா சொத்தின் அளவு எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு ரூ.1 கோடி என்றால் தாவா சொத்திற்கு ரூ.1 கோடி தந்து கிரையம் எழுதுவதாக சொல்லி பணம் எதுவும் தரவில்லை. தாவா சொத்து ஒரு M.R.வெங்கடாஜலம் ஐயர் என்பவருக்கு பாத்தியம் என்று சொல்லி எனது மாமனார் மீது குற்ற வழக்கு தொடர்ந்து அதில் அவர் தண்டனை பெற்றார் என்றால் சரிதான். அதேபோல் மேற்சொன்ன வெங்கடாஜலம் மீது ஒரு விளம்புகை பரிகாரம் கேட்டு எனது மாமனார் அசல் வழக்கு தாக்கல் செய்து, அது மாண்புமிகு உயர்நீதிமன்ற வரை மேல்முறையீடு செய்யப்பட்டு, இறுதியாக தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதுமட்டுமில்லாமல் எனது மாமனார் பிச்சைமுத்து, வேறுஒரு பிச்சைமுத்துவிற்கு பொதுஅதிகாரம் எழுதிக் கொடுத்து அந்த பொதுஅதிகார முகவர் ஒரு அசல் வழக்கினை தாக்கல் செய்து, அது தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. தாவா சொத்து மற்றும் அதன் சுற்றிலுள்ள சொத்துக்கள் மேற்சொன்ன வெங்கடாஜலத்திற்கு பாத்தியம் என்றும், அவர்தான் தற்போதும் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. எனது கணவரும், அவரது சகோதரரும் எழுதிக் கொடுத்த கிரைய ஆவணத்தில் ரூ.16,50,000/– பெற்றுக் கொண்டு எழுதிக் ../

கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் பணம் கொடுக்கிறேன் என்று சொல்லி கொடுக்கவில்லை. அவ்வாறு ரூ.16,50,000/- பணம் தரவில்லை என்று சொல்லி, எனது கணவரோ, அல்லது அவரது தம்பியோ, காவல்நிலையத்திலோ அல்லது சார்பதிவாளரிடமோ உடனடியாக புகார் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். அவ்வாறு கிரையம் எழுதிக் கொடுத்தபோது எனது கணவர் மற்றும் அவர் தம்பியின் முகவரான கனகராஜுக்கு ரூ.1 கோடி பெற்றுக் கொண்டதாகவும், மீதி கிரைய தொகையான ரூ.1-1/2 கோடியை பிரச்சனை முடிந்தபிறகு பெற்றுக் கொள்வதாகவும், எனது கணவரும், அவரது சகோதரரும் ரசீது எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் ரூ.1 கோடி தருவதாக சொல்லி ஏமாற்றி விட்டார்கள். உரிமையில்லாத சொத்தை விற்பதாக சொல்லி ரூ.1 கோடி பெற்றுக் கொண்டு, திரும்ப பணத்தை கேட்டதால்தான் இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1 முதல் 6 பிரதிவாதிகளுக்கு விற்ற பிறகு எனது மாமனார் மீண்டும் 2, 3 மனுதாரர்களுக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் இந்த விவரம் எனக்கு தெரியாது.

**(2 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுங்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

CHRISTOPHER M

Digitally signed by CHRISTOPHER M
Date: 2025.09.17 17:53:38 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.